(*d*) The local panchayat proposes to repair the road dam at an estimated cost of Rs. 1,500.

Sri P. U. SHANMUGAM : இந்த பாலம் எப்போது கட்டப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் சொல்லுவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அந்த கிராம பஞ்சாயத்து இதை 1,500 ரூபாய் செலவில் கட்டுவதற்கு தீர்மானித்திருக்கிறது.

Sri P. U. SHANMUGAM : அந்த பஞ்சாயத்துக்கு பண நிலே சரியாக இல்லே என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா ? ஆகவே இதை ஸ்தல அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அந்த பாலத்தை கட்ட முன்வருவார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : என்னிடம் இப்போது இருக்கின்ற தகவலின்படி பஞ்சாயத்து இதை கட்டுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். டிவிஷனல் இன்ஜினியர் இதை 1,500 ரூபாய்க்கு எஸ்டிமேட் போட்டு செலவு செய்து இதை முடித்துவிடலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அதுதான் இப்போதைய நிலைமை.

Agricultural Planning and Technique

* 172 *Q.*—**Sri P. G. MANICKAM :** Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the project that will be taken up by the Government in pursuance of the recommendations made by the Indian Delegation to China on Agricultural Planning and Techniques; and

(*b*) the steps taken to execute them?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) A statement[a] is placed on the table of the House.

Sri P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, ஜப்பானிய விவசாய முறையைப் பற்றியும், மேல் நாடுகளிலுள்ள விவசாய முறையைப் பற்றியும் இங்குள்ள பொது மக்களுக்கு எடுத்துரைப்பதற்கு, அதற்கான பிரசாரத்திற்கு 1958–59-ல் 115 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த பிரசாரம் பொது மக்களுக்கு எவ்வாறு செய்யப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : விவசாயிகளிடம் பல முறைகளிலும் பிரசாரம் செய்யப்பட்டு வருகிறது. துண்டுப் பிரசுரங்கள் மூலமாக எந்தெந்த வகையில் ஜப்பானிய முறையை ஏற்றுக்கொள்ளலாம் என்றும், என்னென்ன புது முறைகளை அனுஷ்டிக்கலாம் என்பதைப் பற்றியும் எடுத்துரைத்து விளக்கப்பட்டு வருகிறது.

Sri N. K. PALANISAMI : அவர்கள் செய்த முக்கியமான சிபாரிசு கூட்டுறவு விவசாயம் என்பது. சீனாவில் நிலச் சீர்திருத்தம் செய்து அதன் மூலம் நிலத்தை விவசாயிகளுக்கு விநியோகித்து கூட்டுறவு பண்ணைகள் அமைத்து அதன் மூலம் வெற்றிகரமாக விவசாயத்தை செய்து வருகிறார்கள். இவைகளை இந்த அரசாங்கம் எந்த விதத்தில் அமுல் நடத்தப் போகிறது என்பதை கேட்க விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சீனாவை அப்படியே காப்பியடிக்கவேண்டும் என்பது சிபாரிசு அல்ல, அந்த உத்தேசமும் இந்த அரசாங்கத்திற்கு கிடையாது. கூட்டுறவு பண்ணைகளை அமைக்க வேண்டுமென்பதில் அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது.

Sri K. R. NALLASIVAM : தற்போது நம் நாட்டில் உபயோகப்படுத்தப் பட்டுவருகிற விவசாய கருவிகளுக்குப் பதிலாக ஜப்பான் நாட்டில் உபயோகப்படுத்தப்படுகிற விவசாய கருவிகளை நம் நாட்டில் உபயோகப்படுத்த வேண்டும் என்று ஏதாவது சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதா ?

---

* Printed as Appendix I on pages 152–153 infra.

3rd March 1958]

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்போது என்னென்ன சிபாரிசுகளில் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது என்பதை விவரமாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. இயந்திரங்களைப்பற்றி இப்போது பரிசீலனையில் எடுத்துக்கொள்ளவில்லை.

Sri S. LAZAR : ஸார், இதற்கு முன்னால் சீனா, ரஷ்யா இது போன்ற நாடுகளுக்கு சென்ற தூது கோஷ்டியினர், அங்கு கூட்டுறவு முறையில் நடத்தப்படுகிற சாகுபடியானது நல்ல முறையில் நடக்க வில்லை என்று அறிக்கை விடுத்திருந்தார்களே, அது சம்பந்தமாக சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கூட்டுறவுப் பண்ணைகளினால் பாதகம் ஒன்றும் இருக்க முடியாது. இதைப்பற்றி எவ்வளவோ சிபாரிசுகள் செய்யப்படுகின்றன. கூட்டுறவு முறையை சீரிய முறையில் நடத்தவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் எண்ணம்.

Sri P. G. MANICKAM : சபாநாயகர் அவர்களே, தேசிய விஸ்தரிப் புத் திட்டத்தின் கீழிலும், கூட்டுறவு முறையிலும் விவசாயம் செய்வது போன்று ஹிந்துமத பரிபாலனத்தின் கீழும் இந்த கூட்டுறவு முறையை புகுத்தி விவசாய அபிவிருத்தியை மற்றவர்களுக்கும் காட்டுவதற்கு அர சாங்கம் ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பல விதங்களிலும் முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறது. சில கூட்டுறவு பண்ணைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அரசாங்கம் முற்பட்டிருக்கிறது. ஆனால் கூட்டுறவு பண்ணைகளை அமைப்பதில் விவசாயிகளுடைய ஒத்துழைப்பு முக்கியமாக வேண்டும். அவர்களுடைய பாராட்டுதல் முக்கியம். அது சுலபமாக கிடைப்பதில்லை.

Sri S. NAGARAJA MONIGAR : சைனா ஜப்பான் போன்ற வெளி நாடுகளில் ஏதோ ஒரு இயக்கம் தவறிவிட்டால், நம் நாட்டில் நாம் முயற்சி செய்து என் வெற்றியடையக் கூடாது என்று கேட்கிறேன் ? 1-10 p.m.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : சைனா, ஜப்பானில் அந்த இயக்கம் தவறிவிட்டதாக எனக்குத் தகவல் இல்லை. கனம் அங்கத்தின ருக்கு அவ்வாறு தகவல் இருந்தால், விவரமாகச் சொன்னால் அதைப் பரிசீலனை செய்யலாம்.

Sri K. PONNIAN : தூது கோஷ்டியின் சிபார்சு நஞ்சை தான்யங் களுக்கு மட்டுமா, அல்லது புஞ்சை தான்யங்களுக்கும் சேர்த்தா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : பொதுவாக, விவசாய அபிவிருத்தியைப் பற்றி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நாம் புஞ்சைக்கு எவ்வாறு எடுத்துக் கொள்வது, நஞ்சைக்கு எவ்வாறு எடுத்துக் கொள்வது என்பதை பகுத்தறிவையும், அனுபவத்தையும் உபயோகித்து அதற்குத் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள வேண்டும்.

Sri R. KRISHNASAMI NAIDU : சமீபத்தில் பத்திரிகைகளில் வெளி வந்த செய்திகளை கவனிக்கும்போது, இதுவரையிலும் ரஷியா விலே கட்டாயப்படுத்தி வந்த கூட்டுறவு விவசாய முறையை, அந்தக் கட்டாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டிருப்பதாகவும் செய்தியைப் பார்த்தேன். இந்த முறைக்கும் நம்முடைய முறைக்கும் ஏதாவது வித்தியாசம் இருக்கிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : ரஷியாவைப் போல் நாமும் அப்போதைக்கப்போது அனுபவத்தைக்கொண்டு, முறையை மாற்றிக் கொண்டுவரலாம். ஜப்பான், சைனா, ரஷியா எல்லா நாடுகளின் அனு பவத்தைக் கொண்டு, நம் நாட்டிற்கு ஏற்றவகையில் நாம் அமைத்துக் கொள்ளவேண்டியிருக்கிறது. அந்த வகையில்தான் கூட்டுறவுப் பண்ணை முறையில் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டு வருகிறது.

Sri A. GOVINDASAMY : தேசிய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நலத்திட்டம் இருக்கிற பகுதிகளில் ஜப்பானிய முறையை வலியுறுத்துகிற மாதிரி, அந்தத் திட்டங்கள் இல்லாத பகுதியிலும் அந்த முறையைக் கையாளவேண்டுமென்று அரசாங்கம் உத்திரவிடுமா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அவ்வாறுதான் கவனம் செலுத்திவருகிறோம். திட்டம் இல்லாத இடங்களில் ஜப்பானிய முறையைக் கையாள அரசாங்கம் ஆதரவு அளிக்கும்.

Prohibition of certain dailies in reading rooms

* 173 *Q.*—Sri P. U. SHANMUGAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Government have directed the local bodies **not** to subscribe to certain dailies and weeklies for being **placed in** the reading rooms run by them;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the names of those weeklies and dailies?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir

(*b*) & (*c*) Do not arise.

Sri A. V. P. ASAITHAMBI : அரசாங்கத்திற்கு சம்பந்தப்பட்ட நகரசபை வாசகசாலைகளிலே திராவிட நாடு போன்ற திராவிட முன்னேற்றக் கழகப் பத்திரிகைகளை அனுமதிக்கக் கூடாதென்று சர்க்கார் அறிவித்திருப்பதாகவும், அதன் பேரில் ஆலந்தூர் பஞ்சாயத்து எக்ஸிகூடிவ் ஆபீஸர் அந்தமாதிரிப் பத்திரிகைகளை வாங்கக் கூடாதென்று எழுத்து மூலம் சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

The Hon. Sri C. **SUBRAMANIAM** : எந்தத் தனிப்பட்ட பத்திரிகையையும் வாங்கக் கூடாதென்று சர்க்கார் எந்தவிதமான உத்திரவும் போட்டது கிடையாது. சில நிபந்தனைகளுக்குட்பட்டு எந்தப் பத்திரிகையை வேண்டுமானாலும் வாங்கலாம். அந்த நிபந்தனைகள் யாவனவென்றால் :

(i) The books, magazines and journals to be purchased should be of general public interest and of cultural value;

(ii) The books, classified as short stories or novels, shall be those by standard authors and shall not be of doubtful taste;

(iii) Books, magazines and journals abusing communities or religions shall not be purchased;

(iv) Books, magazines and journals which are of doubtful taste or which contain indecent or undesirable pictures shall not be purchased; and

(v) Prescribed and obscene publications shall not be purchased.

Sri K. VINAYAKAM : Sir, are the Government aware that the journals enumerated by the hon. Member, Sri Asaithambi, do belong to a party and they only cater to the party needs and also they do not come under the categories described by the **Hon.** Minister for Finance?

The Hon. Sri C. SUBRAMANIAM : I am not here to give judgment. As a matter of fact, panchayats and other organizations concerned are given full liberty to take decisions but if it is